29) -- 7.48 -- Lyrics and Meaning in Tamil and English -- ~**namaccivaya padhigam** - su~ndharar thEvAram

# நமச்சிவாயப் பதிகம் - சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

--------------------------------------------------------------

7.48.1)
மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
.. பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
.. வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
.. யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்;
பெற்றலும் பிறந்தேன்; இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்;
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

மற்று - வேறு;
பற்று - பற்றுக்கோடு (support); தஞ்சம் (refuge);
பாவித்தல் - எண்ணுதல்; தியானித்தல்;
கறையூர் என்பது தலத்தின் பெயர்; 'பாண்டிக் கொடிமுடி' என்பது கோயிலின் பெயர்.
நற்றவன் - நல்ல தவ வடிவினன்;

உரை:
கற்றவர்கள் வணங்கித் துதிக்கின்ற, புகழுடைய கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, நல்ல தவவடிவினனே! உனது திருவடியைத் தவிர எனக்கு வேறு புகலிடம் இல்லை என்று உணர்ந்து, உன்னடியையே மனத்தில் தியானிக்கப் பெற்றேன். அப்படித் தியானிக்கப் பெற்றதும் பிறந்த பயன் அடைந்தேன். இனி மீண்டும் பிறக்காத தன்மையும் என்னை வந்து அடையப்பெற்றேன். இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.1)
matRup patRu enakku indRi ~nin thirup pAdhamE manam pAviththEn;
petRalum piRa~ndhEn; inip piRavAdha thanmai va~ndhu eydhinEn;
katRavar thozhudhu Eththum sIrk kaRaiyUril pANdik kodumudi
~natRavA! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva! You are the embodiment of all religious austerities. You dwell in the 'pANdik kodumudi'

temple in the famous town of kaRaiyUr, that is worshipped by learned people. I realized that I have no other refuge except You and meditated on Your holy feet. That was when I was truly born. I also achieved the state of not being born again. Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

====================================

சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

----------------------------------------------------------

7.48.2)
இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந்
..	திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு
..	தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
..	தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ்
..	சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
இட்டன் உன் அடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள், மறந்திட்ட நாள்,
கெட்ட நாள் இவை என்று அலால் கருதேன், கிளர் புனல் காவிரி
வட்ட வாசிகை கொண்டு அடி தொழுது ஏத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

இட்டனுன்னடி - இட்டன் உன் அடி / இட்டன் நுன் அடி;
இட்டன் - இஷ்டன் - சிநேகிதன் (Friend); விருப்பத்திற்கு இடம் ஆனவன் (Endeared person);
(திருநாவுக்கரசர் தேவாரம் - 5.4.1 "வட்டனை ..... இட்டனை ....".
இட்டம் - விருப்பம். இட்டம் உடையோன் இட்டன். முதல்வன் உயிர்களுக்குச் சிவத்துவத்தை
வழங்கும் விருப்பம் உடையான் ஆதல்பற்றி இட்டன் எனப்பட்டான்;)

கிளர்தல் - மிகுதல்; பொங்கி எழுதல்;
வாசிகை - மாலை (garland);
நட்டவன் - நண்பன்; (நள்ளுதல் - நட்டல் - நட்புக்கொள்ளுதல்; விரும்புதல்);

உரை:
பொங்கி வரும் நீரை உடைய காவிரி, வட்டமான மாலையைக் கொண்டுவந்து உன் திருவடியை வணங்கித் துதிக்கின்ற, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நண்பனே! விரும்புகிற/விரும்பப்படுகிற உனது திருவடியைத் துதிக்கின்ற அடியவர்கள் என்னை இகழ்ந்த நாள்களும், (அப்படி அவர்கள் இகழும்படி நான்) உன்னை மறந்துவிட்ட நாள்களும், ஆகிய இவற்றை, அழிந்த நாள் என்று எண்ணுவதைத் தவிர வேறு விதமாக நினைக்கமாட்டேன்; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

குறிப்பு: காவிரி நதி, பல பூக்களை அடித்துக்கொண்டு வந்து கரையில் ஒதுக்குவதை, மாலை

கொண்டு வந்து வழிபடுவதாக அருளினார். இது, தற்குறிப்பேற்றம் என்ற அணி.

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.2)
ittan un adi EththuvAr igazh~ndhitta ~nAL, maRa~ndhitta ~nAL,
ketta ~nAL ivai endRu alAl karudhEn, kiLar punal kAviri
vatta vAsigai koNdu adi thozhudhu Eththu pANdik kodumudi
~nattavA! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva! You are the friend who dwells in the 'pANdik kodumudi' temple, where the Kaveri river worships Your holy feet with garlands! You are the desired one! Those days when your devotees despised me, those days when I forgot Your holy feet - I consider all those days as wasted days (/bad days). Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

Notes:
1) Siva is referred to as 'ittan' (based on "ishta" - desired, liked, wished, beloved,,,,). Devotees like Him. Siva likes the devotees.
2) Kaveri river waters carry many flowers that are washed ashore. Sundarar ascribes that to Kaveri worshipping Siva in "pANdik kodumudi" temple with flower garlands.
3) The phrase "ittanun" can be split as "ittan un" or "ittan ~nun" - but both mean the same.

==========================================

சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

----------------------------------------------------------

7.48.3)

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்
.. போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்ற லாற்கரு
.. தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
.. சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
ஓவு[ம்] நாள், உணர்வு அழியும் நாள், உயிர் போகும் நாள், உயர் பாடைமேல்
காவு[ம்] நாள் இவை என்று அலால் கருதேன், கிளர் புனல் காவிரிப்
பாவு தண் புனல் வந்து இழி பரஞ்சோதி, பாண்டிக் கொடுமுடி
நாவலா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

ஓவுதல் - நீங்குதல் (to remove, separate); முடிதல் (to cease, terminate, become extinct);
காவுதல் - சுமத்தல் (to carry on the shoulder, etc.);
உயர்த்தல் - தூக்குதல்;
கிளர்தல் - மிகுதல்; பொங்கி எழுதல்;
தண் புனல் - குளிர்ந்த நீர்;
பாவுதல் - பரத்தல் (to extend); வியாபித்தல் (to pervade); படர்தல்;

பரஞ்சோதி - மேலான ஒளி - கடவுள் (Supreme Being, as the Light Divine)

குறிப்பு: நாவலன் - இறைவன் வேதத்தை ஓதுவதால், நாவலன் என்று அருளினார்.

உரை:
மேலான ஒளியே! பொங்கி வரும் நீரை உடைய காவிரியின் பரந்த வெள்ளம் வந்து பாய்கிற, 'திருப் பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கிற, நா வன்மை உடையவனே! உன்னை மறந்திருந்த நாள்களை, என் உணர்வு அழிந்த நாள்களும், உயிர்போன நாள்களும், தூக்கும் பாடையின்மேல் வைத்துச் சுமக்கப்படும் நாள்களும் என்னும் இவைகளாக எண்ணுவதைத் தவிர வேறு விதமாக நினைக்கமாட்டேன்; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.3)
Ovum ~nAL, uNarvu azhiyum ~nAL, uyir pOgum ~nAL, uyar pAdaimEl
kAvum ~nAL ivai endRu alAl karuthEn, kiLar punal kAvirip
pAvu thaN punal va~ndhu izhi para~njjOdhi, pANdik kodumudi
~nAvalA! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva! O Divine Light! O exponent of Vedas! You dwell in the 'pANdik kodumudi' temple, where the Kaveri river flows spreading its cool waters. Those days when I forgot You - I consider all those days as days when I had lost my senses, as days when I was dead, as days when my body was carried on a bier. Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

========================================

சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

---------------------------------------------------------

7.48.4)
எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை
.. தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி
.. காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
.. யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
எல்லை இல் புகழ் எம்பிரான்; எந்தைதம் பிரான்; என் பொன், மா மணி;
கல்லை உந்தி வளம் பொழிந்து இழி காவிரி அதன் வாய்க்கரை,
நல்லவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
வல்லவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

எல்லை - அளவு;
பிரான் - தலைவன் (Lord, king, chief, master); கடவுள்;

எம்பிரான் - எம் பிரான் - எம் ஆண்டவன் (Our Lord);
எந்தை - என் தந்தை;
கல் - இரத்தினக் கற்கள்;
வாய்க்கரை - கரைவாய் - கரையில்;
வல்லவன் - ஆற்றல் உள்ளவன்;

உரை:
அளவற்ற புகழ் உடைய எம்பெருமானே! என் தந்தைக்கும் தலைவனே! என் பொன் போல்பவனே! என் மணி போல்பவனே! இரத்தினக் கற்களை உருட்டி வந்து, வளங்களைச் சொரிந்து பாய்கிற காவிரியின் கரையில், நல்லவர்கள் வணங்கித் துதிக்கிற, புகழ் உடைய கறையூரில் உள்ள, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாம் வல்லவனே! இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.4)
ellai il pugazh embirAn; e~ndhaitham pirAn; en pon, mA maNi;
kallai u~ndhi vaLam pozhi~ndhu izhi kAviri adhan vAykkarai,
~nallavar thozhudhu Eththum sIrk kaRaiyUril pANdik kodumudi
vallavA! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.

O Siva! O our Lord of infinite fame! O Lord of my father! O my Precious! Good people worship and praise You in the famous 'pANdik kodumudi' temple in the kaRaiyUr town situated on the bank of Kaveri river that carries various gemstones and pours wealth. O Omnipotent! Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

==========================================
சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48
----------------------------------------------------------
7.48.5)
அஞ்சி னார்க்கர ணாதி என்றடி
.. யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
.. நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
.. தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
அஞ்சினார்க்கு அரண் ஆதி என்று அடியேனும் நான் மிக அஞ்சினேன்;
அஞ்சல் என்று அடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கு அழிகின்றது என்?
பஞ்சின் மெல் அடிப் பாவைமார் குடைந்து ஆடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சு அணி கண்ட! நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

அஞ்சுதல் - அச்சப்படுதல் - இங்கே அஞ்சி அடைதல்;
அரண் - பாதுகாவல்;
ஆதி - கடவுள் (அனைத்திற்கும் மூலமாக, முன்னே உள்ளதால்);
அழிதல் - கெடுதல்; மனம் உருகுதல்; இரங்குதல்;
பஞ்சின் மெல் அடி - பஞ்சு போல் மென்மையான பாதம்; (அப்பர் தேவாரம் - 5.9.6 - "துஞ்சும் போதும் .... பஞ்சின் மெல்லடிப் பாவை ...");
பாவை - பெண்;

உரை:
ஆதியே! பஞ்சு போன்ற மென்மையான பாதங்களை உடைய பெண்கள் காவிரியில் மூழ்கி நீராடுகிற (கறையூரில் உள்ள), 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, விடத்தை அணிந்த கண்டத்தை உடையவனே! (நீலகண்டனே). அச்சமுற்று வந்து உன்னை அடைந்தவர்களுக்கு நீ பாதுகாப்பு ஆவாய் என்று அறிந்து, அடியேனாகிய நானும் மிகவும் அச்சமுற்று வந்து உன்னை அடைந்தேன்; நீ 'அஞ்சேல்' என்று அபயம் அளித்து, அடித்தொண்டனாகிய எனக்கு அருள்புரிந்தாய். அதனால் உனக்குக் கெடுகின்றது என்ன? (ஒன்றும் இல்லை). இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.5)
a~njjinArkku araN Adhi endRu adiyEnum ~nAn miga a~njjinEn;
a~njjal endRu adith thoNdanERku aruL ~nalginAykku azhigindRadhu en?
pa~njjin mel adip pAvaimAr kudai~ndhu Adu pANdik kodumudi
~na~njju aNi kaNda! ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.

O Siva! O poison-adorned dark throated one! O primal Lord! You dwell in the 'pANdik kodumudi' temple in kaRaiyUr town where beautiful women with soft feet bathe in the Kaveri river. You are the protection for those who are afraid. Having realized it, I too have have come to you for the same reason. Saying "do not fear", You have given protection to your lowly servant. Yet, you have not lost anything. Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

========================================
சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48
----------------------------------------------------------
7.48.6)
ஏடு வான்இளந் திங்கள் சூடினை
.. என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
.. அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
.. சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:

ஏடு வான் இளம் திங்கள் சூடினை; என் பின்! கொல் புலித் தோலின்மேல்
ஆடு பாம்பு அது அரைக்கு அசைத்த அழகனே! அம் தண் காவிரிப்
பாடு தண் புனல் வந்து இழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேடனே! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

ஏடு - மலர் இதழ் (petal); மலர்; குற்றம்;
சூடினை - சூடினாய்;
கொல்புலித்தோல் - வினைத்தொகை - கொன்ற புலியின் தோல்; கொல்லும் புலியின் தோல்;
ஆடுதல் - அசைதல் (to move, wave, swing, shake, vibrate);
அரை - இடை;
அசைத்தல் - கட்டுதல்;
அம் - அழகிய;
தண் - குளிர்ந்த;
பரஞ்சோதி - பரம் சோதி - மேலான ஒளி - கடவுள்;
சேடன் - பெரியோன்; கடவுள்; (சேஷம் - மீதி; இதன் அடிப்படையில், "சேடன் - எல்லாம் ஒடுங்கிய பின்னும் எஞ்சியிருப்பவன்" என்றும் சொல்லலாம்);

உரை:
மேலான ஒளியே! பெரியோனே! (/என்றும் எஞ்சியிருப்பவனே)! கொன்ற புலியினது தோலின் மேல், அசைகிற பாம்பைத் தன் இடுப்பில் கட்டியுள்ள அழகனே! அழகிய, குளிர்ந்த காவிரியின் ஒலிக்கிற குளிர்ந்த நீர் வந்து பாய்கிற, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிப்பவனே! நீ, வானில் தோன்றும், பூவிதழ் போன்ற பிறைச்சந்திரனை முடிமேல் அணிந்தாய்; பிறகு என்ன? (உன் பேரருளைப்பற்றி இன்னும் சொல்லவும் வேண்டுமோ?). இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

(சந்திரனுக்கு அருள் புரிந்தது: தக்கனது மகள்கள் 27 பேரையும் மணந்த சந்திரன், அவர்கள் அனைவரையும் சமமாக நடத்தாமல் அவர்களிடம் காட்டிய ஒருதலைப்பட்சமான அன்பால், தக்கன் சந்திரன் தேய்ந்து அழியுமாறு அவனுக்குச் சாபமிட்டான். அதனால் சந்திரனின் ஒவ்வொரு கலையாகத் தேய்ந்து குறைந்து வந்தது. சந்திரன் சிவனிடம் சரண் அடைய, அவர் சந்திரனைத் தன் தலையில் சூடி, அழியாதவாறு காத்தார்.)

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.6)
Edu vAn iLam thi~nggaL sUdinai; en pin! kol pulith thOlinmEl
Adu pAmbu adhu araikku asaiththa azhaganE! am thaN kAvirip
pAdu thaN punal va~ndhu izhi para~njjOdhi pANdik kudumudic
cEdanE! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva!  O Divine Light! O Great one! You dwell in the 'pANdik kodumudi' temple in the kaRaiyUr town situated on the bank of beautiful cool Kaveri river with roaring waters. O beautiful Lord who ties a snake over tiger skin on the waist! You are wearing a petal-like crescent moon on Your head. Do I need to say anymore (about your kindness)? Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

Notes:

1) Siva wearing the crescent moon: The moon married all 27 daughters of Dhaksha. However, the moon did not treat all of them equally. Hence, Dhaksha cursed moon to wane slowly into nothingness. The moon worshipped Siva and sought refuge. Siva kept the moon on His head and saved him.

2) The term "sEdan' means 'the great one' (from its Tamil root). It can also mean 'the one who remains' (from its Sanskrit root 'sEsham');

==========================================

சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

----------------------------------------------------------

7.48.7)
விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்
.. தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
.. நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
.. தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
விரும்பி நின் மலர்ப் பாதமே நினைந்தேன்; வினைகளும் விண்டன;
நெருங்கி வண் பொழில் சூழ்ந்து எழில் பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென் முலைக் கோதைமார் குடைந்து ஆடு பாண்டிக் கொடுமுடி
விரும்பனே! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

குறிப்பு: 'வினைகளும் விண்டனன்' என்றும் பாடம் ஓதுவர்.

விள்ளுதல் - நீங்குதல்;
நெருங்குதல் - செறிதல் (to be close together; to crowd);
வண்மை - வளப்பம் (fruitfulness, fertility, abundance); அழகு;
கோடு - கரை (bank of a river, bund of a tank or well);
குரும்பை - தென்னை, பனை இவற்றின் இளங்காய் (very young coconut);
கோதை - பெண் ("மாலை போன்ற அழகிய பெண்);
விரும்பன் - விரும்பப்படுபவன்; விரும்புபவன்;

உரை:
தென்னங் குரும்பை போன்ற, மென்மையான கொங்கைகளை உடைய கன்னியர் மூழ்கி நீராடுகிற காவிரியின் கரையில், அடர்ந்த செழிப்பான சோலைகள் சூழ்ந்து அழகுற இருக்கும் 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கிற, விரும்பப்படுபவனே! அடியேன், உனது மலர் போன்ற திருவடிகளையே விரும்பி எண்ணினேன்; அதனால், வினைகளும் நீங்கின; இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.7)
virumbi ~nin malarp pAdhamE ~ninai~ndhEn; vinaigaLum viNdana;
~neru~nggi vaN pozhil sUzh~ndhu ezhil peRa ~nindRa kAvirik kOttidaik
kurumbai men mulaik kOdhaimAr kudain~dhu Adu pANdik kodumudi
virumbanE! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.

O Siva! O loved one! (/O loving one)! You dwell in the 'pANdik kodumudi' temple in the kaRaiyUr town situated on the bank of Kaveri river where beautiful tender breasted young girls bathe and surrounded by dense groves. I meditated on your floral feet with love. By Your grace, all my karma left me. Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

Note:
1) There is another version for the last 2 words in line-1 in some books: "vinaigaLum viNdanan". It does not change the overall meaning - as this phrase means "I got separated from my karma'.
2) The tem 'virumban' can mean 'loving one' or 'loved one'.
========================================
சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48
----------------------------------------------------------
7.48.8)
செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்
.. தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக
.. மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
.. ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
செம்பொன் நேர் சடையாய்! திரிபுரம் தீ எழச் சிலை கோலினாய்!
வம்பு உலாம் குழலாளைப் பாகம் அமர்ந்து, காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேல் குயில் கூவ மா மயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

செம்பொன் - சிறந்த பொன்;
நேர் - ஒத்த; போன்ற;
சிலை - வில;
கோலுதல் - வளைத்தல்;
வம்பு - வாசனை; மணம்;
உலாம் - உலாவும் (உலாவுதல் - சஞ்சரித்தல்; வியாபித்தல்; சூழ்தல்);
அமர்தல் - விரும்புதல்;
கோடு - கரை (bank of a river, bund of a tank or well);
கொம்பு - கிளை;

நம்பன் - விரும்புபவன்; விரும்பத்தக்கவன்;
(சம்பந்தர் தேவாரம் - 2.27.3 - "என்பொன் என்மணி என்ன ஏத்துவார் நம்பன் ..." - என் பொன்னே என் மணியே என்று புகழ்ந்து போற்றுவாரை விரும்புபவன்);

உரை:
சிறந்த பொன் போன்ற சடையை உடையவனே! திரியும் முப்புரங்களில் தீ உண்டாகும்படி வில்லை வளைத்தவனே! மணம் கமழும் கூந்தலை உடைய பார்வதியைத் திருமேனியில் ஒரு பாகத்தில் விரும்பி வைத்துக், காவிரியின் கரையில் உள்ள சோலைகளில் கிளைகளின்மேல் குயில்கள் கூவ, அழகிய மயில்கள் ஆடுகிற, 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கிற விரும்பத்தக்கவனே! இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------
```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.8)
sembon ~nEr sadaiyAy! thiri puram thI ezhac cilai kOlinAy!
vambu ulAm kuzhalALaip pAgam amar~ndhu, kAvirik kOttidaik
kobinmEl kuyil kUva, mA mayil Adu pANdik kodumudi
~nambanE! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva! You have golden matted locks. You bent the bow (to shoot an arrow) to burn down the roaming forts. You lovingly have fragrant haired Parvathi as one half of You. You dwell in the 'pANdik kodumudi' temple in the kaRaiyUr town situated on the bank of Kaveri river where koels on tree branches sing and beautiful peacocks dance. O desirable one! Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

Note:
1) The term '~namban' can mean either "the one who is desirable" or "or the one who loves". Both are appropriate and refer to God.
2) Koel - Indian cuckoo (Eudynamis honorata).

========================================
சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48
----------------------------------------------------------
7.48.9)
சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை
.. தம்பி ரான்எம்பொன் மாமணீயென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
.. பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை
.. யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ்
.. சொல்லும்நா நமச்சி வாயவே.

பதம் பிரித்து:
"சாரணன்; தந்தை; எம்பிரான்; எந்தைதம் பிரான்; எம் பொன், மா மணீ" என்று

பேர் எணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்;
நாரணன் பிரமன் தொழும் கறையூரில் பாண்டிக் கொடுமுடிக்
காரணா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

சாரணன் - 1) எங்கும் இயங்குபவன்; (அப்பர் தேவாரம் - 6.8.3 - "நாரணன்காண் ... சாரணன்காண் ..." - சாரணன் - எங்கும் இயங்குபவன் - சஞ்சரிப்பவன்; எல்லாவற்றையும் அறிபவன்; எங்கும் தோற்றுபவன்);
2) புகலிடம் ஆனவன்; ('அடைக்கலம்' எனப் பொருள் தரும் 'சரண்' என்பதன் அடியாக வந்த தத்திதப் பெயர்);
பிரான் - தலைவன் (lord, king, chief, master); கடவுள்;
எம்பிரான் - எம் பிரான் - எம் ஆண்டவன் (our lord);
எந்தை - எம் தந்தை;
எணாயிர கோடி - எண்ணாயிர கோடி - எண்ணற்ற; அளவில்லாத;
கில்தல்/கிற்றல் - இயலுதல் (to be able);
நாரணன் - நாராயணன் - திருமால்;
காரணன் - மூலமாக இருப்பவன்; முதல்வன்; (one who is the first cause, as the supreme being)

உரை:
திருமாலும், பிரமனும் வணங்குகிற, கறையூரில் 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கிற முதல்வனே! அளவற்ற தேவர்கள், "எமக்குப் புகலிடமானவன்; (/எங்கும் இயங்குபவன்); எம் தந்தை; எம் தலைவன்; எம் தந்தைக்கும் தலைவன்; எங்கள் பொன்; எங்கள் சிறந்த மணி" என்று உன் பெயர்கள் பலவற்றையும் சொல்லிப் பிதற்றி, உன்னைப் பிரியாது இருப்பார்கள். இனி உன்னை நான் மறந்தாலும், என் நா, உனது திருப்பெயராகிய, 'நமச்சிவாய' என்பதையே சொல்லும்.

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.9)
"sAraNan; tha~ndhai; embirAn; e~ndhaitham pirAn; em pon; mA maNI" endRu
pEr eNAyira kOdi dhEvar pidhatRi ~nindRu pirigilAr;
~nAraNan piraman thozhum kaRaiyUril pANdik kodumudik
kAraNA! unai ~nAn maRakkinum sollum ~nA ~namaccivAyavE.
```

O Siva! Countless devas chant your various names saying "Our Refuge! Our Father! our Lord! Our father's Lord! Our Gold! Our Gem!" and keep on babbling your praises. You are always in their minds. O Primal one who is worshipped by Vishnu and Brahma in the 'pANdik kodumudi' temple in the town of kaRaiyUr! Even if I were to forget you, my tongue will go on saying Your holy name 'namaSSivaAya'.

Note:
The term 'sAraNan' can mean either "one who moves everywhere" or "one who is the refuge". Both are appropriate for God.

========================================

சுந்தரர் தேவாரம் - திருமுறை 7.48

-----------------------------------------------------------
7.48.10)
கோணி யபிறை சூடி யைக்கறை
.. யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
.. பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
.. தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை
.. சொல்லு வார்க்கில்லை துன்பமே.

பதம் பிரித்து:
கோணிய பிறை சூடியைக், கறையூரில் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப், பிஞ்ஞகப் பித்தனைப், பிறப்பு இல்லியைப்,
பாண் உலா வரி வண்டு அறை கொன்றைத் தாரனைப், படப் பாம்பு அரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு இல்லை துன்பமே.

கோணுதல் - வளைதல்;
பேணுதல் - விரும்புதல்;
பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன்; சம்ஹாரம் செய்பவன்;
பித்தன் - பேரருள் உடையவன்; (இறைவனது செயல்கள், பித்தர்களின் செயலைப் போலப் பிறரால் அறிவதற்கு அரியனவாய் இருப்பன என்பதாலும் அவன், 'பித்தன்' எனப்படுவான் என்பார்கள்);
(திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 8.22.10 -
"தந்தது உன்றன்னைக்; கொண்டது என்றன்னைச்;
.. சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாது நீ பெற்றதொன்று என்பால்?"
)
பாண் - பண் என்பது நீட்டல் விகாரம் பெற்று வந்தது.
உலா - உலாவுதல்;
அறைதல் - ஒலித்தல்;
கொன்றை - Indian Laburnum tree;
தார் - பூமாலை;
ஊரன் - நம்பி ஆரூரன் - சுந்தரர்;

உரை:
வளைந்த பிறைச்சந்திரனைச் சூடியவனும், சம்ஹாரம் செய்பவனும், பேரருள் உடையவனும், பிறப்பு இல்லாதவனும், வரிகளை உடைய வண்டுகளின் இசை ஒலிக்கும் கொன்றைப் பூமாலையை அணிந்தவனும், படத்தை உடைய பாம்பை அரைநாணாக உடையவனும் ஆகிய, கறையூரில் உள்ள 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோயிலில் விரும்பி எழுந்தருளியிருக்கிற சிவபெருமானை, அவன் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப்பாடல்களைப் பாடுபவர்க்குத் துன்பம் இல்லை.

அன்புடன்,

வி. சுப்பிரமணியன்

----------------------------------------

```
sundarar's thEvAram - thirumuRai 7.48
7.48.10)
kONiya piRai sUdiyaik, kaRaiyUril pANdik kodumudi
pENiya perumAnaip, pi~nj~njagap piththanaip, piRappu illiyaip,
pAN ulA vari vaNdu aRai kondRaith thAranaip, padap pAmbu arai
~nANanaith thoNdan Uran sol ivai solluvArkku illai thunbamE.
```

Siva wears the crescent moon. He is the destroyer. He is the crazy one. He has no birth. He wears a garland of kondRai flowers (Indian Laburnum) where striped bees hum. He wears a cobra as His waist belt. Devotee 'nambi ArUran' (Sundarar) has sung this set of songs on Siva. Those who sing these songs will be free from suffering.

(Note: Siva is referred to as 'crazy' (piththan) - Humans cannot make out the reasoning behind His actions. In that sense, His actions resemble a crazy person's action. Another reason for being referred to as 'crazy' is that He showers His infinite grace. 'mANikka vAsagar' sings in 'thiruvAsagam' thus - "O Sankara! You gave Yourself to me! And, all You got in return was me! I got infinite bliss from You. What did You get from me!" - 8.22.10 - kOyil thiruppadhigam).

anbudan,
V. Subramanian
========================================

Reference:
பன்னிரு திருமுறை உரைநூல்கள் - தருமை ஆதீன வெளியீடு